ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1852/74 - 2014 මාර්තු මස 07 වැනි සිකුරාදා - 2014.03.07

*1852/74 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 07 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1992 ஆம் ஆண்டின் 59 ஆம் இலக்க, விலங்கு நோய்கள் சட்டம்**

5 ஆம் பிரிவின் கீழான பிரகடனமும், அதனோடிணைந்த ஏற்பாடுகளும்

மேல் மாகாணத்தின் கம்பஹா மாவட்டத்தின் பல பிரதேசங்களில் 1992 ஆம் ஆண்டின் 59 ஆம் இலக்க, விலங்குநோய்கள் சட்டத்தின் முதலாம் அட்டவணையில் பட்டியல்படுத்தப்பட்டுள்ள குறித்துரைக்கப்பட்ட நோய்களில் ஒன்றான கால்வாய் நோய் எனப்படும் விலங்குநோய் ஏற்பட்டுள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளதாகையால், கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரப் பணிப்பாளர் நாயகம் (டாக்டர்) டபிள்யூ. கே. த சில்வா ஆகிய நான், 1992 ஆம் ஆண்டின் 59 ஆம் இலக்க, விலங்கு நோய்கள் சட்டத்தின் 5(1) ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு -

(1) மேல் மாகாணத்தின் கம்பஹா மாவட்டத்தை நோய்த்தொற்றுப் பிரதேசமாகவும்;

(2) பசு மாடு, எருமை மாடு, செம்மறியாடு, வெள்ளாடு மற்றும் பன்றி ஆகிய இன விலங்குகளை குறிப்பிட்ட கால்வாய் நோய் தொற்றத்தக்க விலங்கினங்களாகவும்

இக்கட்டளை மூலம் பிரகடனப்படுத்துவதுடன், இக்கட்டளையானது வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் தினத்திலிருந்து அமுலுக்கு வருதல் வேண்டுமெனவும், முன்னதாக நீக்கப்பட்டால் அல்லது இக்கட்டளையின் செல்லுபடிக்காலம் மேற்குறிப்பிட்ட சட்டத்தின் 5(3) ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாக மேலும் நீடிக்கப்பட்டாலொழிய, இக்கட்டளை அமுலுக்கு வரும் தினத்திலிருந்து மூன்று மாதங்களுக்குச் செல்லுபடியாதல் வேண்டுமெனவும் இத்தால் கட்டளை பிறப்பிக்கின்றேன்.

2. இக்கட்டளையானது அமுலில் இருக்கும் வரையிலான காலப்பகுதியில் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரப் பணிப்பாளர் நாயகமாகிய நான்,

(1) குறிப்பிட்ட கால்வாய் நோயை நோய்த்தொற்றுப் பிரதேசங்களுக்குள் மட்டுப்படுத்தி, வேறிடங்களுக்குப் பரவிச் செல்லாமல் தடுக்கும் பொருட்டு, நோய்த்தொற்றுப் பிரதேசத்தில் கீழ்க்குறிப்பிடப்படும் நடவடிக்கைகளை இத்தால் தடை செய்கின்றேன்:-

(அ) நோய்த்தொற்றத்தக்க விலங்குகளில் செயற்கை முறை இனவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளல்;

(ஆ) நோய்த்தொற்றத்தக்க விலங்குகளை அறுத்தல்;

(இ) நோய்த்தொற்றத்தக்க விலங்குகள் சம்பந்தப்பட்டவாறான உயிர் விலங்குச் சந்தைகள், கண்காட்சிகள், போட்டி நிகழ்ச்சிகளை நடாத்துதல்;

(ஈ) நோய்த்தொற்றத்தக்க விலங்குகளை அல்லது அவற்றின் உற்பத்திப் பொருட்களை, நோய்த்தாக்கம் கொண்ட பொருட்கள் விற்றல், விற்பனைக்குக் காட்சிப்படுத்தல், விற்பனைக்கு விடுதல், களஞ்சியப்படுத்தல், விநியோகித்தல் அல்லது பகிர்ந்தளித்தல்.

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

(உ) நோய்த்தொற்றுப் பிரதேசமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள பிரதேசத்திற்குப் பொறுப்பான அரசாங்க மிருக வைத்திய அதிகாரியால் விலங்குநோய்கள் சட்டத்தின் 5(4) ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரமின்றி, அப்பிரதேசத்திலிருந்து நோய்தொற்றத்தக்க விலங்குகள், விலங்கு உற்பத்திப்பொருட்கள், நோய்த்தாக்கம் கொண்ட ஆபத்தான பொருட்கள், நோய்த்தாக்கம் கொண்ட பொருட்கள் ஆகியவற்றை வெளியிடங்களுக்குக் கொண்டு செல்லுதல்;

(ஊ) இறக்கும் தறுவாயில் கால்வாய் நோயினால் பாதிக்கப்பட்ட அல்லது பாதிக்கப்பட்டதாக சந்தேகப்படத்தக்க இறந்த விலங்குகளின் சடலம் அல்லது அதன் ஏதேனுமொரு பாகத்தையோ அல்லது வேறு நோய்த்தாக்கம் கொண்ட ஆபத்தான பொருட்கள், நோய்த்தாக்கம் கொண்ட பொருட்கள் ஆகியவற்றை குளங்கள் மற்றும் ஆறுகள் உள்ளிட்ட நீர்நிலைகளுக்குள் எறிதல் அல்லது போடுதல்.

(எ) இறக்கும் தறுவாயில் கால்வாய் நோயினால் பாதிக்கப்பட்ட அல்லது பாதிக்கப்பட்டதாக சந்தேகப்படத்தக்க இறந்த விலங்குகளின் சடலம் அல்லது அதன் ஏதேனுமொரு பாகத்தையோ அல்லது வேறு நோய்த்தாக்கம் கொண்ட ஆபத்தான பொருட்கள், நோய்த்தாக்கம் கொண்ட பொருட்கள் ஆகியவற்றை வேறு விலங்குகள் அல்லது பறவைகளால் காவிச் செல்லத்தக்கதாக வைத்தல் அல்லது போடுதல்.

(2) மேற்குறிப்பிட்ட விலங்குகள்சட்டத்தின் 6 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாக நோய்த்தொற்றுப்பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள கம்பஹா மாவட்டத்தில் உள்ள சகல பெருந்தெருக்களையும், வீதிகளையும், நோய்த்தொற்றத்தக்க விலங்கினங்களின் நடமாட்டத்திற்கு தடைசெய்யப்பட்ட பிரதேசங்களாகப் பிரகடனப்படுத்துகின்றேன்.

(3) மேற்குறிப்பிட்ட விலங்கு நோய்கள் சட்டத்தின் 6(3) ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு, அச்சட்டத்தின் 6(1) மற்றும் 6(2) ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளை முழுமையாக அமுல்படுத்தும் பொருட்டு குறிப்பிடப்பட்ட நோய்த்தொற்றுப் பிரதேசத்திலிருந்து நோய்தொற்றத்தக்க விலங்குகள், விலங்கு உற்பத்திப்பொருட்கள், நோய்த்தாக்கம் கொண்ட ஆபத்தான பொருட்கள், நோய்த்தாக்கம் கொண்ட பொருட்கள் ஆகியவற்றை வெளியிடங்களுக்குக் கொண்டு செல்வதற்குப் பயன்படுத்தப்படலாமென தீர்மானிக்கப்படும் சகல பெருந்தெருக்கள், வீதிகள் மற்றும் பாதைகள் ஆகியவற்றில் குறிப்பிட்ட நோய்த்தொற்றுப்பிரதேசத்தினுள் அமைந்த மேல் மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரப் பணிப்பாளரால் குறித்துக்காட்டப்படும் பொருத்தமான இடங்கள் வீதித்தடைகள் நிறுவப்படவேண்டிய இடங்களாகப் பிரகடனப்படுத்துகின்றேன்.

(4) மேல் மாகாணத்துக்குப் பொறுப்பான மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரப் பணிப்பாளரால் குறித்துக் காட்டப்படும் இடைத்தாங்கு வலயத்தினுள் நோய்தொற்றத்தக்க இன விலங்குகளை வைத்திருக்கும் ஒவ்வொருவரும், அவ்விடைத்தாங்கு வலயத்துக்குப் பொறுப்பான அரசாங்க மிருகவைத்திய அதிகாரியால் குறித்துரைக்கப்படும் தினத்தில் குறிப்பிட்ட இடத்தில் தங்கள் வசமுள்ள அல்லது தங்களின் கட்டுப்பாட்டில் உள்ள அத்தகைய விலங்குகளுக்கு கால்வாய் நோய்க்கெதிரான தடுப்பு மருந்தை ஏற்றிக்கொள்ளுதல் வேண்டுமென அச்சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு இத்தால் கட்டளையிடுகின்றேன்.

(5) விலங்கு நோய்கள் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு, -

(அ) இக்கட்டளையின் 2(1) ஆம் பிரிவின் கீழ் தடைசெய்யப்பட்ட செயற்பாடுகள் இடம்பெறாமல் இருப்பதை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கும் பொருட்டு அச்சட்டத்தின் 3(3) ஆம் பிரிவின் கீழ் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்களாக செயலாற்றவும், அதன் பொருட்டு அச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் கீழ் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரின் தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கும், கீழ்வரும் உத்தியோகத்தர்களை அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்களாக இத்தால் பிரகடனப்படுத்துகின்றேன்:-

(1) பணிப்பாளர் (கால்நடை சுகாதாரம்), கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம்,
(2) பிரதிப்பணிப்பாளர் (கால்நடை சுகாதாரம்) கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம்,
(3) மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரப் பணிப்பாளர், மேல் மாகாணம்
(4) தலைமையக கால்நடை வைத்திய அதிகாரி, மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம், மேல் மாகாணம்,
(5) மாவட்டக் கால்நடை வைத்திய அதிகாரி, கம்பஹா
(6) நோய்த்தொற்றுப் பிரதேசத்துக்குப் பொறுப்பான அரசாங்க மிருக வைத்திய அதிகாரிகள்
(7) இலங்கைப் பொலிஸ் படையின் ஒவ்வொரு பொலிஸ் உத்தியோகத்தரும்.

(ஆ) அச்சட்டத்தின் 6(3) ஆம் பிரிவின் நோக்கங்களுக்காகவும், அதன் பொருட்டு அச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் கீழ்

அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரின் தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கும் இலங்கை பொலிஸ் படையின் ஒவ்வொரு பொலிஸ் உத்தியோகத்தரையும் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தராக இத்தால் பிரகடனப் படுத்துகின்றேன்.

(இ) அச்சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் செயற்படும் பொருட்டு, கம்பஹா மாவட்ட விலங்கு மருத்துவ புலனாய்வு உத்தியோகத்தரை (வெலிசற) அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தராக இத்தால் பிரகடனப்படுத்துகின்றேன்.

(ஈ) அச்சட்டத்தின் 3(2), 5(4), 12(1) மற்றும் 12(2) ஆகிய பிரிவுகளினால் மிருக வைத்தியரொருவருக்கு உரித்தாக்கப்பட்டுள்ள கடமைகள் மற்றும் தத்துவங்களையும், நோய்த்தொற்றுப் பிரதேசமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள பிரதேசமொன்றினுள் ஆற்றிமுடிக்கவும், பிரயோகிக்கவும் பொருட்டு கம்பஹா மாவட்டத்தின் அரசாங்க மிருகவைத்திய அதிகாரிக்கும் அதிகாரமளிக்கின்றேன்.

(உ) அச்சட்டத்தின் 9 ஆம் மற்றும் 11 ஆம் பிரிவுகளின் நோக்கங்களுக்காக கம்பஹா மாவட்டத்தின் ஒவ்வொரு அரசாங்க மிருகவைத்திய அதிகாரியையும் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்களாகவும் இத்தால் பிரகடனப்படுத்துகின்றேன்.

(டாக்டர்) டபிள்யூ. கே. த சில்வா,
பணிப்பாளர் நாயகம்,
கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம்.

03- 644

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.